# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI

| | |
|---|---|
| **Case No** | **: STC No.1080/2023** |
| **Prosecution Witness** | **: PW 1** |

| | | | |
|---|---|---|---|
| Name | : சாந்தமூர்த்தி | | : |
| Father / Husband Name | : ஏகாம்பரம் | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(Accused present.)

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of **11/09/2024**

**குற்றப்பல்வகை மனு எண்.3148/2024 அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சியிடம் குறுக்கு விசாரணை.**

**குறுக்கு விசாரணை ( எதிரி தரப்பில் )**

நான் தாக்கல் செய்துள்ள சத்திய பிரமாண வாக்குமூலத்திலுள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு நன்கு தெரியும். நான் எதிரிக்கு ரூ.5 லட்சம் 2022ம் ஆண்டு ஏப்ரல் மாதம் எந்த தேதியில் பணம் கொடுத்தேன் என்று எனக்கு நினைவில் இல்லை. நான் அதை சத்திய பிரமாணத்தில் சொல்லவில்லை. நான் எதிரிக்கு ரொக்கமாக தான் பணம் கொடுத்தேன். நான் எதிரிக்கு பணம் கொடுத்த தேதியில் எந்தவித ஆவணங்களும் எழுதிப் பெறவில்லை. நம்பிக்கையின் பேரில் தான் பணம் கொடுத்தேன். எதிரிக்கும் எனக்கும் சுமார் 10 வருடங்கள் பழக்கம் ஆகும். எதிரி 17.04.2023ம் தேதியில் எனக்கு கொடுத்த காசோலையை பூர்த்தி செய்து தான் கொடுத்தார். எதிரி பணத்தை திருப்பி கொடுக்க மறுத்ததாக சொல்லப்படும் நிலையில் அது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. ஆனால் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன்.

எதிரி கொடுத்த காசோலை வங்கிக் கணக்கு முடக்கப்பட்ட விவரம் காசோலை திருப்பப்பட்ட பின்னர் தான் எனக்கு தெரியும். அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் திருப்புதல் மெமோ தாக்கல் செய்துள்ளேன். நான் எதிரிக்கு பணம் கொடுத்த தேதியில் எந்த ஆவணமும் அவரிடமிருந்து பெறாததால் எதிரிக்கு பணம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அதனால் மேற்படி வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றாலும், தள்ளுபடி செய்யக்கூடியது என்றாலும் சரியல்ல.

WEB COPY